Ensuring Better Future for Children

Strahlemann Peace Child Support Centre

East Coast Road, Velankanni, Nagapattinam District, Tamil Nadu, India.

**STRAHLEMANN PEACE CHILD SUPPORT CENTRE**
**No: 72/11 C-2, Thirupoondi Road, Palathadi,**
**Velankanni - 611 111. Tamil Nadu, India**

# CHILD PROTECTION POLICY

## குழந்தை பாதுகாப்பிற்கான செயல்திட்டம் மற்றும் கொள்கை

அறிமுகம்:

அமைதி அறக்கட்டளை ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் இந்நிறுவனம் முக்கிய செயல்பாடாக குழந்தைகள் உரிமைகளை மையமாக கொண்டு குழந்தைகளின் பாதுகாப்பிற்கும், கல்விக்கும், வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் திண்டுக்கல், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பாண்டிச்சேரி யூனியன் பகுதியின் காரைக்கால் மாவட்டத்திலும் செயல்பட்டு வருகிறது. மற்றுமொரு செயல்பாடாக சுனாமி மற்றும் பேரிடரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவு கொடுக்கும் வகையில் SPSC திட்டம் உருவாக்கபட்டது. SPSC திட்டம் பாதிக்கப்பட்ட குழந்தைகள், குழந்தை தொழிலாளர்கள் மற்றும் பள்ளி இடைநின்ற குழந்தைகளிடம் நெருக்கமாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. SPSC திட்டம் “ **உயிர்வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பிற்கான உரிமை மற்றும் பங்கேற்பிற்கான உரிமை**” என்ற 4 உரிமைகளை அடிப்படையாக கொண்டு செயல்பட்டு வருகிறது. (ஐ.நா.வின் மரபு முறையான குழந்தைகள் உரிமை சட்டம்).

பார்வை:

**“அனைத்துக் குழந்தைகளும் பாதுகாக்கப்படுகிறார்கள்”**

அமைதி அறக்கட்டளை தொண்டு நிறுவனமானது உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்ட குழந்தைகள், தகாத செயல்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் கொடுமைப்படுத்தப்பட்ட அல்லது உழைப்பால் சுரண்டப்பட்ட குழந்தைகள் மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கி வருகிறது. (ஐ.நா.வின் மரபு முறையான குழந்தைகள் உரிமை 1989 விதி 19). அமைதி அறக்கட்டளையானது குழந்தைகளை சமூகத்தினால் ஏற்படும் தகாத செயல்பாடுகளிலிருந்து பாதுகாக்க முன்னெச்சரிக்கையாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அமைதி அறக்கட்டளையின் குழந்தை பாதுகாப்பிற்கான செயல்திட்டம் மற்றும் கொள்கை ஜனவரி 2005-லிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

<u>குழந்தை பாதுகாப்பிற்கான செயல்திட்டம் மற்றும் கொள்கை கீழ்கண்ட வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.</u>

**குழந்தைகள்:** 18வயதிற்கு கீழுள்ள அனைத்து குழந்தைகளிடமும் இந்த ஐ.நா.வின் குழந்தைகள் உரிமை பாதுகாப்புக் கொள்கை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இளைஞர்கள்:** 16 வயதிற்கு மேலுள்ள குழந்தைகள் தற்போது தன்னிச்சையாக செயல்படும் அளவிற்கு பொறுப்பாக உள்ளார்கள் இருப்பினும் அமைதி அறக்கட்டளை ஆராய்ந்த வகையில் 16 முதல் 20 வயதிற்கு கீழுள்ள குழந்தைகளுக்கும் பாதுகாப்பு தேவைப்படுகிறது.

## CODE OF CONDUCT OF PEACE TRUST AND SPSC STAFF

## அமைதி அறக்கட்டளையின் கொள்கை மற்றும் விதிமுறைகள்:

## SPSC பணியாளர்கள் செய்யக்கூடியவை:

- அமைதி அறக்கட்டளையின் அனைத்து பணியாளர்களும் குறிப்பாக **SPSC** பணியாளர்கள் அனைவரும் குழந்தைகள் பாதுகாப்பிற்கான செயல்பாடு மற்றும் கொள்கை படிவத்தை படித்து கையெழுத்திட வேண்டும். கொள்கைப்படி அனைத்து பணியாளர்களும் செயல்பட வேண்டும்.

- அமைதி அறக்கட்டளை நிர்வாகிகள், சங்கங்கள், தன்னார்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் கிராம பொது மக்கள் அனைவரும் இந்த கொள்கையை ஏற்று செயல்பட வேண்டும்.
- அமைதி அறக்கட்டளை குழந்தைகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி கொடுத்தல், கற்றுக்கொள்ளும் வாய்ப்பு மற்றும் ஆதரவு கொடுத்தல் ஆகிய அனைத்து செயல்பாட்டுக்கும் உத்திரவாதம் அளிக்கிறது.
- அனைத்து பணியாளர்களும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கு ஊக்கப்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும்.
- குழந்தைகள் தவிர்க்கமுடியாத சுழ்நிலையில் தன்னை எப்படி பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய விழிப்புணர்வு வகுப்பு நடத்த வேண்டும்.
- பணியாளர்கள் அனைவரும் குழந்தைகளை பாதுகாப்பதில் பொறுப்புள்ளவர்களாகவும், அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் உத்திரவாதம் அளிக்க கூடியவர்களாகவும் செயல்பட வேண்டும்.

## SPSC பணியாளர்கள் செய்யக்கூடாதவை

- குழந்தைகளை உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ துன்புறுத்தவோ அல்லது அடிக்கவோ கூடாது.
- குழந்தைகளிடம் தவறான உறவுமுறைகள் வைத்துக்கொள்ளகூடாது.
- குழந்தைகளிடம் உடல்ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ தவறான செயல்பாடுகளில் ஈடுபடக்கூடாது.
- பணியாளர்கள் குழந்தைகள் துாங்கும் அறையில் துாங்கவோ அல்லது தங்கவோ கூடாது. முக்கியமாக ஆண் பணியாளர்கள் பெண்குழந்தைகள் வசிக்கும் இடத்திற்கு செல்ல அனுமதிக்கவே கூடாது.
- குழந்தைகள் வசிக்கும் இடத்தில் மதுபானம் அருந்தவோ, புகை பிடிக்கவோ மற்றும் புகையிலை பயன்படுத்தவோ முற்றிலும் அனுமதிக்க கூடாது.
- குழந்தைகளை தனியாக அறிமுகம்மற்ற மற்றவர்களிடம் பேச அனுமதிக்க கூடாது.
- பணியாளர்கள் தனிப்பட்ட முறையின் குழந்தைகளின் வீட்டிற்கோ அல்லது வெளி இடத்திற்கோ அழைத்துச் செல்லக் கூடாது.

- ❖ பணியாளர்கள் குழந்தைகள் மத்தியில் பாலியல் உணர்வுகளை தூண்டும் வகையில் தவறான செயல்களை செய்யக் கூடாது.
- ❖ பணியாளர்கள் குழந்தைகள் மத்தியில் பாலியல் உணர்வுகளை தூண்டும் வகையில் உடை அணிய கூடாது.
- ❖ பணியாளர்கள் தனிப்பட்ட முறையில் எந்தக் குழந்தைகளிடமும் கூடுதல் அக்கறை செலுத்த கூடாது.

---

As on 12th January 2015